சாராம்சம்: இனிய குழந்தைகளே, நீங்கள் அரைக் கல்பமாக நினைவுசெய்து வந்த தந்தை இப்பொழுது உங்களுக்குத் தன்னை நினைவுசெய்யுமாறு ஒரு கட்டளை பிறப்பிக்கின்றார். இக்கட்டளையைப் பின்பற்றுவதன் மூலம் நீங்கள் ஏறும் ஸ்திதிக்குச் செல்வீர்கள்.

கேள்வி: குழந்தைகளாகிய நீங்களே உங்களுடைய சொந்த சுபாவத்தைச் சீர்ப்படுத்த (குணப்படுத்த) வேண்டும். எவ்வாறு?

பதில்: தந்தை ஒருவரையே நினைவுசெய்வதுடன், யக்ஞத்திற்கு அன்புடன் சேவை செய்யும்பொழுது, உங்கள் சுபாவம் இயல்பாகவே சீர்ப்படுத்தப்படும். ஏனெனில், நினைவு மூலம் ஆத்மாக்களாகிய நீங்கள் நோய்களிலிருந்து விடுபடுவதுடன், சேவை செய்வதனால், நீங்கள் எல்லையற்ற சந்தோஷத்தை அனுபவம் செய்கிறீர்கள். நினைவிலும், சேவையிலும் மும்முரமாக இருப்பவர்களின் சுபாவங்கள் தொடர்ந்தும் சீர்ப்படுத்தப்படுகின்றன.

பாடல்: நீங்கள் இரவை உறங்குவதிலும், பகலை உண்பதிலும் கழித்தீர்கள்.

ஓம் சாந்தி. குழந்தைகளாகிய நீங்கள் பாடலைக் கேட்டீர்கள். நீங்கள் மாலையின் மணிகளை உருட்;டும்பொழுது, இரு யுகங்கள் கடந்து விட்டன. அது எத்தனை யுகங்கள்? இரண்டு யுகங்கள் ஆகும்; சத்திய, திரேதா யுகங்களில் எவருமே மாலையின் மணிகளை உருட்டுவதில்லை. தாங்கள் மேலே ஏறி, பின்னர் கீழே விழுகின்றார்கள் என்பதும் அவர்களில் எவரது புத்தியிலும் இல்லை. இப்பொழுது இது எங்களுடைய ஏறும் ஸ்திதியாகும். ‘எங்களுடைய’ என்றால் பாரத மக்களின் என்று அர்த்தமாகும். பாரத மக்கள் போல் வேறு எவருமே ஏறுவதோ, இறங்குவதோ இல்லை. பாரதமே மேன்மையானதாகின்றது, பாரதமே சீரழிந்ததாகவும் ஆகுகின்றது. பாரதம் விகாரமற்றதாகவும், பின்னர் விகாரம் நிறைந்ததாகவும் ஆகுகின்றது. மற்றைய தேசங்களுக்கும், சமயங்களுக்கும் இது அந்தளவிற்குப் பொருந்துவதில்லை; அவர்கள் எவரும் சுவர்க்கத்திற்குச் செல்வதில்லை; விக்கிரகங்கள் பாரத மக்களுடையவையே ஆகும். நிச்சயமாக அவர்கள் இராச்சியத்தை ஆட்சிசெய்தார்கள். எனவே, தந்தை விளங்கப்படுத்துகின்றார்: இப்பொழுது இது உங்களின் ஏறும் ஸ்திதியாகும். நீங்கள் எவரின் கரத்தைப் பற்றியிருக்கின்றீர்களோ, அவர் உங்களை மீண்டும் தன்னுடன் வீட்டுக்கு அழைத்துச் செல்வார். பாரத மக்களாகிய உங்களுக்கு இது ஏறும் ஸ்திதியாகும். நீங்கள் முக்திக்கும், பின்னர் ஜீவன்முக்திக்கும் செல்வீர்கள். அரைக் கல்பத்திற்கு இது தேவ தர்மத்தின் இராச்சியமாகும். நீங்கள் 21 சந்ததிகளுக்கு மேலேறுகின்றீர்கள், பின்னர் இறங்கும் ஸ்திதிக்குள் பிரவேசிக்கின்றீர்கள். ஏறும் ஸ்திதி இருக்கும்பொழுது அனைவருக்கும் நன்மை உள்ளது என்று கூறப்படுகிறது. இப்பொழுது அனைவருக்கும் நன்மையே ஏற்படப் போகின்றது, ஆனால் நீங்கள் மாத்திரமே ஏறும் ஸ்திதியினூடாகவும், இறங்கும் ஸ்திதியினூடாகவும் செல்கின்றீர்கள். இவ்வேளையில் வேறு எவருமே பாரதத்தைப் போன்று கடனாளிகளாக இல்லை. எங்கள் பாரதம் “தங்கச் சிட்டுக்குருவியாக” இருந்தது, அது செல்வம் மிக்கதாக இருந்தது என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துகொள்கின்றீர்கள். இப்பொழுது பாரதத்தின் இறங்கும் ஸ்திதி முடிவுக்கு வருகின்றது. இன்னும் 40,000 ஆண்டுகளுக்கு கலியுகம் நீடிக்கப் போகின்றது எனக் கல்விமான்கள் எண்ணுகின்றனர். அவர்கள்

காரிருளில் உள்ளனர். எனவே நீங்கள் அவர்களுக்கு மிகுந்த சாதுரியத்துடன் விளங்கப்படுத்த வேண்டும். இல்லாவிடின், பக்தர்கள் அதிர்ச்சியடைவார்கள். முதலில் இரு தந்தையரதும் அறிமுகத்தைக் கொடுங்கள். கடவுள் பேசுகிறார்: கீதையே அனைத்தினதும் தாயும் தந்தையும் ஆகும். கீதை மூலமே ஆஸ்தி பெறப்படுகின்றது; ஏனைய யாவும் அதன் குழந்தைகளே. ஓர் ஆஸ்தியானது குழந்தைகளிடமிருந்து பெறப்பட முடியாது. குழந்தைகளாகிய நீங்கள் உங்கள் ஆஸ்தியைக் கீதை மூலம் பெறுகின்றீர்கள். தாயான கீதையின் தந்தையும் உள்ளார். பைபிள் போன்றவற்றைத் தாய் என அழைக்க முடியாது. எனவே, "பரமாத்மா பரமதந்தையுடன் நீங்கள் என்ன உறவுமுறையைக் கொண்டுள்ளீர்கள்?" என்று முதலில் அவர்களிடம் வினவுங்கள். ஒரேயொருவரே அனைவரதும் தந்தை. ஆத்மாக்கள் யாவரும் ஒரு தந்தையின் குழந்தைகளான, சகோதரர்கள். தந்தை, மக்களின் தந்தையான, பிரம்மாவின் மூலம் மனித உலக விருட்சத்தை உருவாக்குகிறார், எனவே நீங்கள் சகோதர, சகோதரிகள்; ஆகுகின்றீர்கள். எனவே, நீங்கள் நிச்சயமாகத் தூய்மையாக இருக்க வேண்டும். தூய்மையாக்குபவரான தந்தை வந்து, சாதுரியமாக உங்களைத் தூய்மையாக்குகிறார். குழந்தைகளாகிய நீங்கள் தூய்மையாகினால் உலகின் அதிபதிகள் ஆகுவீர்கள் என்பதைப் புரிந்துகொள்கின்றீர்கள். இது அத்தகையதொரு மகத்தான வருமானம்! முட்டாள் ஒருவரே தூய்மையாகாமலும், 21 பிறவிகளிற்கான இராச்சியத்தையும் கோராமலும் இருப்பார். உங்களுக்கு ஸ்ரீமத் வழங்கப்படுகின்றது, அப்படியிருந்தும் நீங்கள் அரைக்கல்பமாக நினைவு செய்து வந்த தந்தையின் கட்டளைகளை ஏற்றுக் கொள்கின்றீர்களில்லை! அவரின் கட்டளைகளைப் பின்பற்றாததால், நீங்கள் பாவாத்மாக்கள் ஆகுகின்றீர்கள். இதுவே பாவாத்மாக்களின் உலகமாகும், ஆனால் இராம இராச்சியமோ தூய, புண்ணியாத்மாக்களின் உலகமாகும். இப்பொழுது இது பாவாத்மாக்களின் உலகமான, இராவண இராச்சியமாகும். குழந்தைகளாகிய உங்கள் அனைவருக்கும் இப்பொழுது இது ஏறுகின்ற ஸ்திதியாகும். நீங்கள் உலகின் அதிபதிகள் ஆகுகின்றீர்கள். நீங்கள் இங்கு மிகவும் மறைமுகமாகவே அமர்ந்திருக்கின்றீர்கள்; நீங்கள் தந்தையை நினைவுசெய்ய வேண்டும். மாலையை உருட்டுதல் போன்ற கேள்விக்கே இடமில்லை. தந்தையின் நினைவில் இருந்தவாறே செயலாற்றுங்கள்: "பாபா, பாருங்கள், நாங்கள் உங்களின் யக்ஞத்திற்கு பௌதீகமாகவும், சூட்சுமமாகவும் ஒரேசமயத்தில் சேவை செய்கின்றோம்." பாபா உங்களுக்குக் கட்டளையிட்டுள்ளார்: இவ்விதமாக என்னை நினைவுசெய்யுங்கள். மக்கள் இயற்கை வைத்தியம் செய்கின்றார்கள். ஆத்மாக்களாகிய நீங்கள் குணப்படுத்தப்படும்பொழுது, உங்கள் சரீரங்களும் குணமடையும். தந்தையை நினைவுசெய்வதால், நீங்கள் தூய்மையற்றவர்களிலிருந்து தூய்மையானவர்களாக மாறுகின்றீர்கள். தூய்மையாகுவதுடன், தொடர்ந்தும் யக்ஞத்திற்குச் சேவை செய்யுங்கள். சேவை செய்வதன் மூலம் நீங்கள் பெரும் சந்தோஷத்தை அனுபவம் செய்வீர்கள். இவ்வளவு காலத்திற்குத் தந்தையின் நினைவில் இருப்பதனால், அதாவது, பாரதத்திற்கு அமைதியைத் தானம் செய்வதனால், நாங்கள் எங்களை நோயிலிருந்து விடுபட்டவர்கள் ஆக்குகின்றோம். ஸ்ரீமத்தைப்; பின்பற்றுவதனால், நீங்கள் பாரதத்திற்கு அமைதியையும், சந்தோஷத்தையும் தானம் செய்கின்றீர்கள். உலகில் எண்ணற்ற ஆச்சிரமங்கள் உள்ளன, ஆனால் அங்கு எதுவுமேயில்லை. 21 சந்ததிகளுக்குச் சுவர்க்க இராச்சியத்தைப் பெறுவது எவ்வாறு சாத்தியம்

என்பதை அவர்கள் அறிய மாட்டார்கள். நீங்கள் இப்பொழுது இராஜயோகம் கற்கின்றீர்கள். தந்தையாகிய கடவுள் வந்து விட்டதாகவும், அவர் நிச்சயமாக எங்கோ இருக்கின்றார் எனவும் அம்மக்;கள் கூறுகின்றனர். நிச்சயமாக அவர் எங்கேயோ இருக்க வேண்டும்! விநாசத்திற்காகக் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நிச்சயமாக தந்தை சுவர்க்கத்தின் ஸ்தாபனையையும், நரகத்தின் விநாசத்தையும் தூண்டுகின்றார். இது நரகம், இல்லையா? அதிகளவு சண்டை, சச்சரவுகள் போன்றன உள்ளன. மக்கள் அதிகளவு பயத்திலுள்ளனர். குழந்தைகள் கடத்திச் செல்லப்படுகின்றனர். பல அனர்த்தங்களும் இடம்பெறுகின்றன. இவ்வுலகம் மாற்றப்படுகின்றது என்பதை நீங்கள் இப்பொழுது அறிவீர்கள். கலியுகம் சத்திய யுகமாக மாறுகின்றது. இவ்வேளையில் நீங்கள் சுவர்க்கத்தை ஸ்தாபிப்பதில் பாபாவின் உதவியாளர்களாக உள்ளீர்கள். பிராமணர்களே உதவியாளர்கள் ஆகுபவர்கள். மக்களின் தந்தையான பிரம்மாவின் மூலமே பிராமணர்கள் உருவாக்கப்படுகின்றனர். ஏனையோர் பாவம் மூலம் பிறக்கின்றனர், ஆனால் நீங்களோ வாய்வழித் தோன்றல்கள். அவர்கள் (லௌகீகப் பிராமணர்கள்) பிரம்மாவின் குழந்தைகளாக இருக்க முடியாது. நீங்கள் இப்பொழுது தத்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். பிராமணர்களாகிய நீங்கள் பிரம்மாவின் குழந்தைகள். மக்களின் தந்தையான, பிரம்மா சங்கமத்தில் மாத்திரமே இருக்க முடியும். பிராமணர்கள் பின்பு தேவர்கள் ஆகுகின்றனர். அந்த பிராமணப் புரோகிதர்களுக்கு, அவர்கள் பாவம் மூலம் பிறந்தவர்கள் என நீங்கள் விளங்கப்படுத்தலாம். நீங்கள் கூறுகின்றீர்கள்: பிராமணர்களுக்கும், தேவர்களுக்கும் வந்தனங்கள். அவர்கள் பிராமணர்களையும் வணங்குகின்றார்கள், தேவர்களின் விக்கிரகங்களையும் வணங்குகின்றார்கள். பிராமணர்கள் இந்த வேளையிலேயே இருப்பதால், இப்பொழுதே அவர்கள் வணங்கப்பட முடியும். இந்தப் பிராமணர்கள் தகுதிவாய்ந்தவர்கள்;; இவர்கள் தமது சரீரம், மனம், செல்வத்தின் மூலம் பாபாவின் ஸ்ரீமத்தைப் பின்பற்றுகின்றார்கள் என்பதை அவர்கள் புரிந்துகொள்கின்றனர். மற்றவர்கள் மக்களை பௌதீக யாத்திரைகளுக்கு அழைத்துச் செல்கின்றார்கள். இது உங்களுடைய ஆன்மீக யாத்திரையாகும். உங்கள் யாத்திரை மிக இனிமையானது! அந்த யாத்திரைகள் எண்ணற்றவை. எண்ணற்ற குருமார்கள் உள்ளனர். அனைவரையும் தமது குரு என மக்கள் அழைக்கின்றனர். நீங்கள் இப்பொழுது இனிமையிலும் இனிமையான சிவபாபாவின் ஸ்ரீமத்தைப் பின்பற்றி, பிரம்மா மூலம் உங்கள் ஆஸ்தியை அவரிடமிருந்து பெறுகின்றீர்கள் என்பதைக் குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். நீங்கள் சிவபாபாவிடமிருந்து உங்கள் ஆஸ்தியைக் கோருகின்றீர்கள். நீங்கள் இங்கு வரும்பொழுது, "நீங்கள் யாரிடம் வந்துள்ளீர்கள்?" என உங்களிடம் உடனடியாக வினவப்;படுகின்றது: இச்சரீரம் சிவபாபாவினால் கடனாக எடுக்கப்பட்டுள்ளது என்பது உங்களிடம் புத்தியில் உள்ளது. நாங்கள் அவரிடம் செல்கின்றோம். பிராமணப் புரோகிதர்கள் திருமண நிச்சயதார்த்தங்களை நடாத்தி வைக்கின்றனர், எனினும், மணமகனும் மணமகளுமே ஒருவரோடொருவர் தொடர்பு கொள்கின்றனர்; அவர்களின் தொடர்பு தங்கள் நிச்சயதார்த்தத்தை நடாத்தி வைத்த பிராமணப் புரோகிதருடன் அல்ல. ஒரு மனைவி தனது கணவனை நினைப்பாளா அல்லது அந்தப் பந்தனத்தில் அவளை இணைத்தவரை நினைப்பாளா? சிவனே உங்கள் மணமகன். எனவே, நீங்கள் ஏன் சரீரதாரிகளை நினைவுசெய்கின்றீர்கள்? சிவனை நினைவுசெய்யுங்கள்! நீங்கள் விளங்கப்படுத்துவதற்கே

இப்பதக்கங்களை பாபா செய்வித்துள்ளார். உங்களை நிச்சயதார்த்தம் செய்வதற்காக பாபாவே முகவர் ஆகுகின்றார், எனவே நீங்கள் முகவரை நினைவுசெய்யக்கூடாது. மணவாட்டிகள், மணவாளனுடன் யோகம் செய்கின்றார்கள். மம்மாவும், பாபாவும் வந்து, குழந்தைகளாகிய உங்கள் மூலம் முரளியைப் பேசுகின்றனர். பாபா கூறுகின்றார்: நான் நன்மை பயப்பதற்காக, பல குழந்தைகளின் நெற்றியில் அமர்ந்திருந்து முரளியைப் பேசுகின்றேன். நான் எவருக்காவது காட்சிகள் கொடுப்பதற்காக அல்லது முரளியைப் பேசுவதற்காக அல்லது நன்மை பயப்பதற்காகவே வருகின்றேன். ஆசிரியர்களுக்கு அந்தச் சக்தி இல்லை. எவராவது ஒருவரை உயர்த்துவதற்கு ஆசிரியரால் இயலாதுள்ளது என நான் அறியும்பொழுது, நான் வந்து ஓர் அம்பை எய்கின்றேன், அதன் மூலம் அந்த ஆத்மா ஆசிரியரை விடவும் மேலும் முன்னேறிச் செல்கின்றார். அந்த ஆசிரியரோ சரீர உணர்விற்குள்ளாகி, தானே அவரை உயர்த்தியதாக எண்ணுகின்றார். அந்த அகங்காரம் இருக்கக்கூடாது; உண்மையில் சிவபாபாவே அனைத்தையும் செய்பவர். இங்கு, பாபாவை நினைவுசெய்யுமாறு உங்களுக்குக் கூறப்படுகின்றது. உங்கள் தொடர்பு சிவபாபாவுடனேயே இருக்க வேண்டும். இவர் இடையில் உள்ள முகவNர் தனது சொந்த வெகுமதியை இவர் பெற்றுக்கொள்கின்றார். இது வயதான, அனுபவம் வாய்ந்த சரீரம். அது மாற்றப்பட முடியாது; அது நாடகத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ளது. அடுத்த கல்பத்தில், அவர் வேறொரு சரீரத்தில் வருவார் என்றில்லை; இல்லை! இறுதியாக உள்ளவர் முதலாவதாகச் செல்ல வேண்டும்; இவர் விருட்சத்தின் உச்சியில் நிற்கின்றார். நீங்கள் இப்பொழுது சங்கமத்தில் அமர்ந்திருக்கின்றீர்கள். பாபா மக்களின் தந்தையான, பிரம்மாவில் பிரவேசித்துள்ளார். உலக மாதா ஒரு காமதேனு (அனைத்து ஆசைகளையும் பூர்த்தி செய்யும் பசு) ஆவார். அத்துடன் கபில்தேவரும் (ஒரு ரிஷி) உள்ளார். ஒரு ஜோடி என்றால் இருவராவர்: தாயும் தந்தையுமான, பாபாவும் தாதாவும், எனவே அவர்கள் ஒரு தம்பதி ஆவர். தாயிடமிருந்து ஆஸ்தியானது பெறப்பட முடியாது. நீங்கள் சிவபாபாவிடமிருந்தே ஆஸ்தியைப் பெறுவதால், அவரையே நினைவுசெய்ய வேண்டும். நான் இவருடன் உங்களை மீண்டும் வீட்டிற்கு அழைத்துச் செல்லவே இவரில் வந்துள்ளேன். பிரம்மாவும் சிவபாபாவையே நினைவுசெய்கின்றார். அவர்கள் சங்கரரிற்கு முன்பாகவும் சிவனின் ரூபத்தை வைக்கின்றனர். அவை அனைத்தும் புகழின் ஓர் அடையாளமே. சிவபாபா இவ்வேளையில் வந்து, எங்களைத் தனது குழந்தைகள் ஆக்குகின்றார். நீங்கள் உங்கள் தந்தையை வழிபடுவதில்லை. தந்தை வந்து, குழந்தைகளாகிய உங்களை அழகானவர்கள் ஆக்குகின்றார்; அவர் உங்களைச் சாக்கடையிலிருந்து அகற்றுகின்றார். தாங்கள் ஒருபொழுதும் தூய்மையற்றவர்கள் ஆகமாட்டோம் என ஆத்மாக்கள் சத்தியம் செய்கின்றனர். தந்தை கூறுகின்றார்: எனது மடிக்கு வந்த பின்னர், உங்கள் முகத்தை அழுக்காக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் அவ்வாறு செய்தால், குடும்பத்;திற்கு அவமரியாதையை ஏற்படுத்துவீர்கள். தோல்வியடைவதன் மூலம், நீங்கள் ஆசிரியரின் பெயரை அவமரியாதை செய்கின்றீர்கள். நீங்கள் மாயையினால் தோற்கடிக்கப்பட்டால், உங்கள் அந்தஸ்து அழிக்கப்படுகின்றது. எந்தவொரு சந்நியாசிகளும் இவ்விடயங்களைக் கற்பிப்பதில்லை. நீங்கள் மாதத்திற்கு ஒரு தடவை விகாரத்தில் ஈடுபடலாம் எனச் சிலர் கூறுகின்றனர். ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை விகாரத்தில் ஈடுபடலாம் என வேறு சிலர் கூறுகின்றனர், சிலர் முற்றிலும் அஜாமிலைப் (சீரழிந்த பாவிகள்) போன்றவர்கள். பிரம்ம பாபா பல குருமாரை ஏற்றுக் கொண்டார். அவர்கள்

ஒருபொழுதும் மக்களைத் தூய்மையாகுமாறு கேட்பதில்லை. தம்மாலேயே தூய்மையாக இருக்க முடியாதுள்ளது என்பதை அவர்கள் புரிந்துகொள்கின்றனர். ஒரு விவேகி உடனடியாகவே ஒரு சந்நியாசியைப் பார்த்துக் கேட்பார்: உங்களாலேயே தூய்மையாக இருக்க முடியாவிட்டால், எவ்வாறு நீங்கள் எங்களை இதனைச் செய்யும்படி கேட்க முடியும்? அப்படியிருந்தும் ஜனகனைப் போன்று ஒரு விநாடியில் ஜீவன்முக்தி அடைவதற்கான பாதையைக் காட்டும்படி அவர்கள் கேட்கின்றார்கள். குருமார்கள்; கூறுகின்றனர்: நீங்கள் பிரம்ம தத்துவத்தை நினைவுசெய்தால், உங்களால் நிர்வாணா தாமத்திற்குச் செல்ல முடியும். உண்மையில் எவருமே அங்கு திரும்பிச் செல்வதில்லை; அவர்களுக்கு அதற்கான சக்தி இல்லை. அசரீரி உலகமே ஆத்மாக்கள் அனைவரினதும் வசிப்பிடமாகும். ஆத்மாக்களாகிய நாங்கள் அங்கு நட்சத்திரங்களைப் போன்று வசிக்கின்றோம். அவர்கள் வழிபடுவதற்காக, பெரிய லிங்கமொன்றை உருவாக்குகின்றார்கள். எவ்வாறு ஒரு புள்ளியை வழிபட முடியும்? அற்புதமான நட்சத்திரமொன்று நெற்றியின் மத்தியில் பிரகாசிப்பதாக அவர்கள் கூறுகின்றனர். எனவே ஆத்மாக்களின் தந்தையும் அவ்வாறே இருக்க வேண்டும். தந்தைக்கென ஒரு சரீரம் கிடையாது. அத்தகையதொரு நட்சத்திரத்தை எவ்வாறு வழிபடமுடியும்? தந்தை பரமாத்மா என அழைக்கப்படுகின்றார்; அவரே தந்தை. ஆத்மாவைப் போன்றே பரமாத்மாவும் உள்ளார், அவரது உருவம் பெரியதல்ல. அவரிடம் ஞானம் உள்ளது. வேறு எவருக்கும் இந்த எல்லையற்ற விருட்சத்தைப் பற்றித் தெரியாது. தந்தை மாத்திரமே ஞானம் நிறைந்தவர். அவர் ஞானமும், தூய்மையும் நிறைந்தவர். அவரே அனைவருக்கும் சற்கதி அருள்பவர். அவர் அனைவருக்கும் அமைதியையும், சந்தோஷத்தையும் கொடுக்கின்றார். குழந்தைகளாகிய நீங்கள் அத்தகைய பெரிய ஆஸ்தியைப் பெறுகின்றீர்கள். அது வேறு எவராலும் பெறப்பட முடியாது. மக்கள் தங்கள் குருமாரை அதிகளவில் வணங்குகிறார்கள்! தங்கள் சக்கரவர்த்திகளைக்கூட அவர்கள் அந்தளவிற்கு வணங்குவதில்லை. அதுவும் குருட்டு நம்பிக்கையே. அவர்கள் தொடர்ந்தும் என்ன செய்கின்றார்கள். எனப் பாருங்கள்! அனைத்திலும் அவதூறே அன்றி, எதுவுமில்லை! அவர்கள் கிருஷ்ணரை ‘பிரபு’ என்றும், கடவுள் என்றும் அழைக்கின்றார்கள். கடவுள் கிருஷ்ணரே சுவர்க்கத்தின் முதல் இளவரசன் என்று அவர்கள் கூறுகின்றார்கள். இலக்ஷ்மி நாராயணனையும் அவர்கள் இறைவன், இறைவி என்று கூறுகின்றனர். பலர் பழைய உருவங்களை வாங்குகின்றனர். பழைய முத்திரைகளும் விற்கப்படுகின்றன. உண்மையில், சிவபாபாவே அதி புராதனமானவர். ஆனால் எவருக்கும் இது தெரியாது. புகழ் அனைத்தும் சிவபாபாவிற்கே உரியது, ஆனால் உங்களால் அவரைக் கண்டறிய முடியாது. மிகவும் பழையது எது? சிவபாபாவே முதலாமவர் ஆவார். தங்கள் தந்தை யார் என்றோ, அவரின் பெயரும்;, ரூபமும் என்னவென்றோ எவரும் அறிய மாட்டார்கள். அவர் பெயரோ, ரூபமோ அற்றவர் என அவர்கள் கூறுகின்றனர். எனவே அவர்கள் யாரை வழிபடுகின்றார்கள்? சிவன் என்ற பெயர்; உள்ளது. அவரின் தேசமும், அவர் வருகின்ற காலமும் உள்ளன. அவரே கூறுகின்றார்: நான் சங்கமத்திலேயே வருகின்றேன்; ஆத்மா சரீரத்தின் மூலம் பேசுகின்றார். எவ்வாறு சமயநூல்களில் பல கட்டுக்கதைகள் எழுதப்பட்டுள்ளன என்பதையும், அவை எவ்வாறு உங்களை இறங்கும் ஸ்திதிக்கு இட்டுச் சென்றன என்பதையும் குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது புரிந்துகொள்கின்றீர்கள். சத்திய, திரேதா யுகங்கள் ஏறும் ஸ்திதியாகும், துவாபர, கலியுகங்கள் இறங்கும் ஸ்திதியாகும்.

இது இப்பொழுது மீண்டும் ஒருமுறை உங்கள் ஏறும் ஸ்திதியாகும். தந்தையைத் தவிர, வேறெவராலும் உங்களை ஏறும் ஸ்திதிக்குக் கொண்டு வர முடியாது. இவ்விடயங்கள் யாவும் கிரகிக்கப்பட வேண்டும். எனவே எந்தச் செயலில் ஈடுபட்டிருக்கும்பொழுதும் நினைவில் நிலைத்திருங்கள். ஸ்ரீநாத் துவாராவில் வேலை செய்யும்பொழுது, அவர்கள் தமது வாயைத் துணியினால் கட்டிக் கொள்வார்கள். ஸ்ரீ கிருஷ்ணரே ஸ்ரீநாதர் என அழைக்கப்படுகின்றார். அவர்கள் ஸ்ரீநாதரிற்கு உணவு சமைக்கின்றார்கள். சிவபாபா உணவு போன்றவற்றை உண்பதில்லை. நீங்கள் பாபாவின் நினைவில் தூய உணவைச் சமைக்கும்பொழுது, அதிலிருந்து சக்தியைப் பெறுவீர்கள். அவர்கள் கிருஷ்ண பூமிக்குச் செல்வதற்காக விரதங்கள் அனுஷ்டிக்கின்றனர். நீங்கள் கிருஷ்ண பூமிக்குச் செல்கின்றீர்கள் என்பதை இப்பொழுது புரிந்துகொள்கின்றீர்கள். இதனாலேயே நீங்கள் ;ந்தவர்கள் ஆக்கப்படுகின்றீர்கள். நீங்கள் தந்தையை நினைவுசெய்தால், நிச்சயமாக கிருஷ்ண பூமிக்குச் செல்வீர்கள் என்பதற்கு பாபா உத்தரவாதம் அளிக்கிறார். நீங்கள் உங்களுக்காகவே கிருஷ்ண பூமியாகிய இராச்சியத்தை ஸ்தாபிக்கின்றீர்கள், பின்னர் அங்கு நீங்கள் இராச்சியத்தை ஆள்வீர்கள் என்பதைப் புரிந்துகொள்கின்றீர்கள். ஸ்ரீமத்தைப் பின்பற்றுபவர்கள் கிருஷ்ணரின் பூமிக்குச் செல்வார்கள். இலக்ஷ்மி நாராயணனின் பெயர்களை விடவும் கிருஷ்ணரின் பெயர் மிகவும் பிரபல்யமானது. கிருஷ்ணர் ஒரு சிறு குழந்தை என்பதால், ஒரு மகாத்மாவிற்குச் சமமானவர். குழந்தைப் பருவ ஸ்திதி சதோபிரதானானது; இதனாலேயே கிருஷ்ணரின் பெயர் அதிகளவில் நினைவுகூரப்படுகிறது. அச்சா.

இனிமையிலும் இனிமையான, அன்புக்குரிய, எப்போதோ தொலைந்து இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் தந்தை தாயாக இருக்கும் பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் காலை வந்தனங்களும். ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே சொல்கிறார்.

தாரணைக்கான சாராம்சம்:

1. உங்களின் முழுத் தொடர்பையும் சிவபாபா ஒருவருடன் மாத்திரமே வைத்துக் கொள்ளுங்கள். சரீரதாரிகள் எவரையும் நினைவுசெய்யாதீர்கள். ஆசிரியரான, உங்கள் தந்தையின் பெயரை என்றுமே அவதூறு செய்யாதீர்கள்.
2. உங்கள் மூலம் எவராவது நன்மையடைந்தால், அகங்காரம் கொண்டு, நீங்களே அந்த ஆத்மாவிற்கு நன்மை செய்தீர்கள் என்று எண்ணாதீர்கள். அதுவும் சரீர உணர்வே. உங்கள் மூலமாக அதைச் செய்வித்தவரான, தந்தையையே நினைவுசெய்யுங்கள்.

ஆசீர்வாதம்: நீங்கள் ஆட்ட, அசைக்க முடியாதவராக இருந்து, அமிர்த வேளையில் மூன்று புள்ளிகள் எனும் திலகத்தை இடுவதால், “ஏன்?” அல்லது “என்ன?” என்கின்ற குழப்பம் எதனிலிருந்தும் விடுபட்டிருப்பீர்களாக.

பாப்தாதா எப்பொழுதும் கூறுகின்றார்: ஒவ்வொரு நாளும் அமிர்த வேளையில், மூன்று புள்ளிகள் எனும் திலகத்தை இட்டுக் கொள்ளுங்கள். நீங்களும்; ஒரு புள்ளி, தந்தையும் ஒரு புள்ளி, நடப்பவை அனைத்தும் புதியதல்ல என்பதால், ஒரு முற்றுப்புள்ளியும் ஒரு புள்ளியே. எனவே மூன்று புள்ளிகள் எனும் இந்தத் திலகத்தை இடுவது எனில், உங்கள் விழிப்புணர்வை நிலையாக

வைத்திருப்பதாகும். அப்பொழுது நீங்கள் நாள் முழுவதும் ஆட்ட, அசைக்க முடியாதவராக இருப்பதுடன், "ஏன்?" அல்லது "என்ன?" என்கின்ற குழப்பங்கள் அனைத்தும் முடிவடையும். எப்பொழுதெல்லாம் ஏதேனும் நடைபெற்றாலும், ஒரு முற்றுப்புள்ளியை இடுங்கள். எதுவுமே புதியதல்ல, அது நடைபெற வேண்டியிருந்தது, அது நடைபெறுகின்றது, ஒரு பற்றற்ற பார்வையாளராக அனைத்தையும் பார்த்து, தொடர்ந்தும் முன்னேறிச் செல்லுங்கள்.

சுலோகம்: வீணான எண்ணங்கள் விரைந்து வருவதற்கான விசையை முடித்து விடுவதற்கு, உங்கள் மாற்றத்தின் சக்தியைப் பயன்படுத்துங்கள், அப்பொழுது நீங்கள் சக்திநிறைந்தவர்கள் ஆகுவீர்கள்.

**---ஓம் சாந்தி---**